2015

No. of Printed Pages : 3

203018

**4901**

Register Number | | | | | | | 

**Second Year**

# இந்தியக் கல்விமுறை

# INDIAN EDUCATION SYSTEM

(Tamil Version)

நேரம் : 3 மணி

மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

I. **அனைத்து** வினாக்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் **100** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். **15x2=30**

1. கல்வி, கேள்வி - தொடர்பு படுத்துக.

2. அகழ்வாராய்ச்சியின் மூலம் கண்டெடுக்கப்பட்ட உலகின் பழங்கால நாகரிகங்கள் யாவை?

3. இயற்கையியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை?

4. அறிந்தவற்றைச் செயல்படுத்தும் திறனை குழந்தைகளிடம் வளர்க்கும் நான்கு முறைகளை எழுதுக.

5. ''சமூக நலன்'' எனும் விழுமத்தை மாணவர்களிடம் விதைக்க நீவீர் கூறும், இரண்டு நடைமுறை உத்திகள் யாவை?

6. செங்குத்து நிலை பெயர்வுக்கு கல்வி சார்ந்த ஓர் உதாரணம் கூறுக.

7. பள்ளிகளிடையே ஆரோக்கியமான போட்டி மணப்பான்மையை உருவாக்கும் ஏதேனும் நான்கு முறைகளைக் குறிப்பிடுக.

[ Turn over

8. பள்ளிகளைத் தத்தெடுத்தலில் உள்ள ஏதேனும் நான்கு சிக்கல்களை அடையாளம் காண்க.

9. இந்திய பண்பாட்டில் காணப்படும் ஏதேனும் நான்கு நேர்மறைக் கூறுகளை இனங்காண்க.

10. குழந்தைகளுக்கு ஆசிரியர்களால் மறுக்கப்படும் உரிமைகளாக நீவீர் கருதும் ஏதேனும் நான்கினைக் குறிப்பிடுக.

11. பயிற்சி சார்ந்த மைய ஒருங்கினைப்பாளரின் பணிகள் யாவை?

12. 'பால்வாடி' 'அங்கன்வாடி' வேறுபடுத்துக.

13. தேசிய ஒருமைப்பாடு என்பதன் பொருள் யாது?

14. நடுநிலை மனதை உடைய ஆசிரியரின் செயல்பாடுகள் யாவை?

15. பள்ளி மேலாண்மையில் "ஒருங்கிணைத்தல்" என்பதன் பொருள் யாது?

## பகுதி - II

II. எவையேனும் **பத்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் **200** சொற்களில் விடையளி. **10x4=40**

16. "தட்சசீலம்" "விக்ரமசீலா" - ஒப்பிடுக.

17. தாகூர் வலியுறுத்தும் தொடக்கக்கல்வி சார்ந்த கல்விப் பயன்கள் யாவை?

18. இலட்சிய வழி, யதார்த்த வழி - வேறுபடுத்துக.

19. தேர்வுச் சீர்திருத்தங்களின் அவசியம் யாது?

20. யுனெஸ்கோவின் அமைதிக் கல்வித்திட்ட கோட்பாடுகளை பட்டியலிடுக.

21. சமுதாயக் கண்காணிப்பு மற்றும் அதனை மேம்படுத்தும் செயல்கள் குறித்து ஒரு திட்டம் வரைக.

22. ஜார்ஜ் பீட்டர் முர்டாக் (George Peter Murdock) குறிப்பிடும் பண்பாட்டின் தன்மைகள் யாவை?

23. மக்களாட்சி, குடியாட்சி - ஒப்பிடுக.

24. ''அனைவருக்கும் தொடக்கக்கல்வி'' என்பதன் பொருள் யாது?

25. சுற்றுச் சூழல் கல்வி என்றால் என்ன? அவை வழிகாட்டும் கொள்கைகள் யாவை?

26. மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் பணிகள் யாவை?

27. பள்ளி இணைப்புத்திட்டத்தின் நிறை குறைகளைத் தர்க்கிக்க.

## பகுதி - III

III. பின்வரும் வினாக்களுக்கு 500 சொற்களில் விடையளிக்கவும். 3x10=30

28. (அ) கல்வியின் அணுகு முறைகளில் ஏதேனும் மூன்றினை கூறி அவற்றை உமது வகுப்பறையில் எவ்வாறு செயல்படுத்துவீர் என விவரிக்க.

**அல்லது**

(ஆ) ''சமூக நிலைப் பெயர்வும் கல்வியும் பிரிக்க முடியாதவை''. தர்க்கம் செய்க.

29. (அ) அனைவருக்கும் கல்வியில் சமவாய்ப்பு வழங்கும் அரசின் முயற்சிகளைப் பட்டியலிடுக.

**அல்லது**

(ஆ) ஒரு கிராமத்திலுள்ள 10000 ஆண்களில், எழுத்தறிவு பெற்றோர் 7500 பேர். 8000 பெண்களில் எழுத்தறிவு பெற்றோர் 6000 பேர் எனில்

(i) எழுத்தறிவு சதவீதம் - ஆண்

(ii) எழுத்தறிவு சதவீதம் - பெண்

(iii) கிராம எழுத்தறிவு சதவீதம் - ஆகியவற்றை கணக்கிடுக.

30. (அ) ஆசிரியர் ஒரு முன்னோடி, வழிகாட்டி - விளக்கம் தருக.

**அல்லது**

(ஆ) ஆசிரியர் உறுதிப்பாட்டின் உட்கூறுகளை விளக்குக.

-o0o-